திருவள்ளூர். தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் அவர்களின்
செயல்முறை ஆணைகள்
முன்னிலை திரு. எஸ். குமார். பி.,இ.,
சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர் துறை தமிழ்நாடு அமைச்சுப் பணி – திருமதி. உ. ராதா , இளநிலை உதவியாளர் . தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவள்ளூர் – 24/09/2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை அரசால் செய்யப்பட்டது –தகுதிகாண் பருவத்தில் வைத்தல் – ஆணை வெளியிடல்.

அ/2702/2022 நாள் 04.11.2022

படிக்கப்பட்டது :-

1. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண் ஜி3/10543/2014, நாள் 17/09/2018
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண் ஜி3/35991/2020, நாள் 18/11/2021
3. சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ஒ1/23682/2021, நாள் 26/11/2021
4. அரசாணை (2D) எண் .73, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (இ2) துறை, நாள் 13.09.2002
5. அரசு கடித எண் 18476/இ2/2020–4, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (இ2) துறை நாள் 14/09/2022
6. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண் ஜி3/29283/2020, நாள் 29/09/2022.
7. தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்புவிதிகள், விதி 34 உடன் பிற்சேர்க்கை V.

<u>ஆணை :-</u>

பார்வை (1)இல் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக கருணையடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு 24/09/2018 முற்பகல் முதல் சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்த திருமதி. உ. ராதா. என்பவர் பார்வை (2) மற்றும் (3) இல் காணும் செயல்முறை ஆணைகளின் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு 02/12/2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (4) இல் காணும் அரசாணையின் வாயிலாக திருமதி. உ. ராதா என்பவரின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணிநிபந்தனைகள் சட்டம் 2014ன் பிரிவு 15க்கு தளர்வு அளித்தும் மற்றும் நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பணப்பலன்கள் பெற ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம் 2016) பிரிவு 22யை தளர்வு செய்தும் தனியர் பணியில் சேர்ந்த நாளான 24/09/2018 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் , ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஆகியவற்றை நடைமுறையிலுள்ள விதிகளின்படி பெற தகுதியுடையவராகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கருணையடிப்படையில் பணிநியமனம் பெற்ற தனியர் பணியில் சேர்ந்த நாளான 24/09/2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன் முறை செய்து இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

எனவே, அன்னாரை 24/09/2018 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைத்து அன்று முதல் தொடங்கும் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

தகுதிகாண் பருவ காலத்தில் அன்னார் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் , பவானிசாகர் அரசு அலுவலருக்கான அடிப்படை பயிற்சியை நிறைவு செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிபந்தனைகளை நிறைவு செய்தால்தான் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருத்தினை முடித்தவராக அறிவிக்கப்படும் எனவும் இரண்டாம் மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவர் அடுத்த பதவி உயர்வுக்கு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் – I மற்றும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர் துறை தேர்வு பகுதி “அ” மற்றும் “ஆ” வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்கள் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது என இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

இணை இயக்குநர்
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
திருவள்ளூர்.

<u>பெறுநர்</u>

திருமதி. உ. ராதா, இளநிலை உதவியாளர்,
துணை இயக்குநர் அலுவலகம்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
திருவள்ளூர்.

நகல்
துணை இயக்குநர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருவள்ளூர்.

<u>நகல் பணிந்தனுப்பப்படுகிறது:-</u>

1. இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கிண்டி, சென்னை –32.
2. கூடுதல் இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கிண்டி, சென்னை –32